[12th March 1959

SRI P. S. SANTHANAM: வட ஆற்காடு ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் அம்மாதிரி கொடுக்கப்படாமல் இருந்தால் அதை உடனடியாகக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மாதிரி இல்லாததோடு அல்ல. இன்னும் 25,000 ரூபாய் கொடுத்து 50 கிணறுகள் வெட்டுவதற்கும் இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

SRI V. SUBBIAH: இந்த வருஷத்தில் அம்மாதிரி குடி தண்ணீர் அல்லது நீர்பாசன வசதிக்கு என்று வெட்டப்படும் கிணறுகளை வெட்டும்போது பஞ்சப் பிரதேசமாகவும், வரண்டப் பிரதேசமாகவும் இருக் கக்கூடிய இடங்களுக்கு முதலிடம் கொடுக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது நீர்பாசனத் திற்கு வேண்டிய கிணறுகள் வெட்டப்படுகின்றன. எங்கே அத்தியாவசியம் ஏற்படுகிறதோ அந்த மாவட்டங்களில் வெட்டப்படுகின்றன. எங்கேயெல்லாம் நீர்பாசனத்திற்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் கிணறுகள் வெட்டும் திட்டம் துரிதமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டு மென்பது அரசாங்கத்தின் எண்ணம்.

SRI S. M. ANNAMALAI: கிணறுகள் வெட்டுவதற்காக பணம் கொடுக்கும்போது பத்து ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்க ளுக்கும் பணம் உள்ளவர்களுக்கும்தான் பணம் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு ஏன் கொடுக்கப்படுவது இல்லை என்று கேட்டால் சரியாக விண்ணப்பங்கள் வரவில்லை என்று அதிகாரிகள் சொல்லி விடுகிறார்கள். சரியாகவும் விளம்பரம் செய்வதும் இல்லை. ஆகையால் இரண்டு ஏக்கர் முதற்கொண்டு ஐந்து ஏக்கர் வரையில் வைத்துக்கொண்டிருக்கிறவர்க ளுக்கும் பணம் தர வேண்டும் என்ற உத்தரவை சர்க்கார் போடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மாதிரி ஐந்து ஏக்க ருக்கு உட்பட்டவர்களுக்கு பணம் கொடுக்கப்படுவதில்லை என்ற தகவல் எனக்கு இதுவரையிலும் வரவில்லை. கனம் அங்கத்தினர் அதைப்பற்றிய தகவல் கொடுத்தால் அதில் கவனம் செலுத்தவேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளுகிறேன்.

Residential quarters for N.G.Os.

* 748-A Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் N.G.O.-க்களுக்கு குடியிருக்க எவ்வளவு அரசாங்கத்தாரால் கட்டப்பட்ட வீடுகள் உள்ளன ?

(ஆ) புதிதாக இந்த ஆண்டு எத்தனை வீடுகள் கட்டப்படும் ?

(இ) அரசாங்க வீடுகளில் குடியிருப்பவர்களிடம் வாடகை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) 1,944 including 1,355 for the police subordinate staff.

(*b*) A scheme for the construction of 300 houses for the workers of the Government Press, Madras, spread over a period of three years has been sanctioned and taken on hand. But it is unlikely that any house will be completed during the current financial year.

12th March 1959]

(c) *Todhunternagar* (*Saidapet*).—The rent ranges from Rs. 20 to Rs. 30 per mensem according to type of quarters or 10 per cent of the occupants' emoluments whichever is higher.

Government Estate (*Mount Road*).—Ten per cent of the occupants' emoluments or standard rent plus service tax whichever is less.

SRI K. ANBAZHAGAN : என்.ஜி.ஓ.வினருக்குக் கட்டப்பட்டுள்ள வீடு களில் இதர தரப்பினர் அனுமதிக்கப்பட்டுவருவது உண்மையா ? அப் படித் தரப்பட்டிருந்தால் அவைகளைப் பெற்று என்.ஜி.ஓ.வினருக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI S. M. ANNAMALAI : இப்படி வீடுகள் கட்டுவதற்கு ஏதாவது சப்சிடி அல்லது மானியம் தரப்படுகிறதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI : கவர்ன்மெண்ட் ப்ரஸ் தொழிலாளர் களுக்குக் கட்டப்படும் வீடுகள் எவ்வளவு மதிப்புக் கொண்டது. அதற்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி பி.டபிள்யூ. டி. தொழிலாளர்களுக்குக் கட்டப்படும் வீடுகளின் மதிப்பு என்ன ? அதில் மத்திய அரசாங்கத்தினருடைய பணம் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய அரசாங்கத்திலிருந்து ஒன்றும் கிடையாது. ப்ரெஸ் தொழிலாளர்களுக்கு செலவாகும் தொகையைச் சென்னை அரசாங்கம் கொடுக்கிறது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI P. G. MANICKAM : என்.ஜி.ஓ.க்களுக்கு வீடுகள் கட்டும் திட்டமானது சென்னை நகரில் மட்டும்தான் இருக்கிறதா அல்லது மேற்கொண்டு இதர நகரங்களிலும் மேற்கொள்ள சர்க்கார் ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் இதற்கு தனியாகக் கேள்வி போட வேண்டும்.

SRI A. GOVINDASAMY : சென்னை நகரத்திலுள்ளவர்களுக்கு வீடு வாடகை அலவன்சு எழு ரூபாய் கொடுக்கப்படுவதால் அவர்களால் வீடுகள் வைத்துக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படி அலவன்சு கொடுத்தும் அவர்களுடைய பிரச்னை தீரவில்லை. அதனால் அவர்களுக்கு அதிகமாக வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தொழிலாளர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு அரசாங்கம் பல தொழிற்சாலைகளை வீடுகள் கட்டிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு வீடுகள் கட்டுவதைப்பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டு வருகிறது. சில ருக்கு வீடுகளும் கட்டிக்கொடுத்துக்கொண்டும் வருகிறார்கள்.

The Madras Dramatic Performances Act

* 749 *Q*.—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of dramatic performances prohibited in 1958 under the Madras Dramatic Performances Act, 1954; and

(*b*) the reasons therefor?